4. 1981 ஆம் ஆண்டில் போதிய மழையின்மை காரணமாக ஒரு சில மாவட்டங்களின் சில பகுதிகளில் குடிநீர் கிணறுகளில் நீர் மட்டம் இறங்கிக் கொண்டே வருவதற்கான சாத்தியக்கூறு உள்ளது. இந்நிலைமையைச் சமாளிக்கும் பொருட்டு தற்போதுள்ள பொது குடிநீர்க் கிணறுகளை ஆழப்படுத்துவதற்காக அரசு ரூ. 10 இலட்சம் அனுமதித்துள்ளது. இத்தொகை, துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

5. இராமேஸ்வரம், மாமல்லபுரம், கன்னியாகுமரி நகரியங்களை, அனைத்து நாட்டு சுற்றுலா மகிழ்விடங்களாக ஒருங்கிணைந்த வகையில் மேம்படுத்துவதற்கான பெருந்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு நிதியுதவி வேண்டி இந்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளன. நமது வேண்டுகோள் இந்திய அரசின் பரிசீலனையில் உள்ளது. இந்திய அரசிடமிருந்து உதவி கிடைப்பதை எதிர்பார்த்து இவ்வரசு மாமல்லபுரம், இராமேசுவரம், கன்னியாகுமரி நகரியங்களில் கடைகள், கட்டடத் தொகுதி போக்குவரத்து நிலையம், திறந்த வெளித் திரையரங்கம் முதலிய அடிப்படை வசதிகள் செய்து கொடுப்பதற்காக அவற்றுக்கு 50 சதவீத கடன், 50 சதவீத மானிய அடிப்படையில் ரூ. 58 இலட்சம் அனுமதித்துள்ளது. இதில் மானியப் பகுதி தற்போது வைக்கப்பட்டுள்ள துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ளது.

6. 1982–83 நிதியாண்டுக்கான வரவு—செலவுத் திட்டத்தில் நிதி ஒதுக்கவியலாத ஒரு சில முக்கிய செலவினங்களை மட்டுமே இப்போது எடுத்துக் கூறியுள்ளேன். துணை மதிப்பீடுகளில் சேர்க்கப்பட்டுள்ள திட்டங்கள் அனைத்திற்கும் இசைவளித்து, அவற்றுக்குக் கேட்டுள்ள தொகையை வழங்குமாறு அவையை வேண்டி அமர்கிறேன்.

ALONE TRIUMPHS

(6) அறிவிப்புகள்.

(அ) முதல் துணை நிதி அறிக்கை 1982—83 வெட்டுத் தீர்மானங்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1982-83-ஆம் ஆண்டிற்கான முதல் துணை நிதிநிலை அறிக்கையின் மீது விவாதமும், மானியக் கோரிக்கைகள் மீது வாக்கெடுப்பும், 9-9-1982 ஆம் தேதியன்றே எடுத்துக் கொள்வது என்ற அலுவல் ஆய்வுக் குழுவின் முடிவிற்கிணங்க, வெட்டுத் தீர்மானங்கள் இன்று 8-9-1982 மாலை 3-00 மணிக்குள் பேரவை அலுவலகத்தில் சேர்ப்பிக்க வேண்டும்.